அன்னையின் அநேக ரூபங்கள்

அன்னை சக்தியின் வடிவங்கள் தலங்கள்
பற்றிய இந்துத் தமிழ்க் கவிஞர்களின் கவிதைகள்



தொகுப்பாசிரியர்
ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்

சீனி வீரப்பன்,
அபிராமபுரம், சென்னை-18.

சென்னை தம்புசெட்டித் தெரு, ஸ்ரீ காளிகாம்பாள் கமடேஸ்வரர்
ஆலயத்தில் அரங்கேறிய கவிதைகள்

மயிலைக் கற்பகாம்பாள்

(கவிஞர் நெல்லை அருள் மணி)

திருமயிலை ஒரு கயிலாயம் — அங்கே
தேவாதிதேவர் எல்லாம் சரணாலயம்
திருச்சங்கம் முழங்கும் திசையெங்கும் வணங்கும்
திருப்புகழ் மணக்கும் திருவருள் நிறைக்கும்

வேதத் திருமந்திரம் நாரத சிவகானம்
வெற்றிநலம் அருளும் ரிஷபமணி வாகனம்
நாதமணித் தெய்வம் ஓம்நம சிவாயம்
நாடும்பொருள் வழங்கும் ஞானத்திருவிளங்கும்

திருமுறை தேவாரம் நாவாரப் பாடி
தேர்வடம் போல் செண்பக மாலைகள்சூடி
அருள்மிகு கபாலி கற்பக ஊர்வலம்
ஆயிரம் சுடர்காட்டும் ஆனந்தநிலை கூட்டும்

கதிர்மதிப் பிரகாசம் புகழ் வைர மணிமகுடம்
கற்பகத் திருச்சபையில் மாணிக்கப் பொற்பதக்கம்
மதிவானம் காட்டும் அதிகார நந்தி
மலர்வண்ணத் தேர்ஓடும் ஞானப்பால் பொங்கும்

தங்கமயில் வாகனத்தில் சிங்கார வேலன்
திருத்தொண்டர் திருக்காட்சி அறுபத்துமூவர்
மங்கலத் தாய்மைக்கு மயில்அம்மை நற்சாட்சி
மனம்பாடும் நாமத்தில் தினம்ஓங்கும் சிவமாட்சி

நல்முத்துப் பல்லக்கில் கற்பகத்தாய் வந்தாள்
வெல்வது அருள்என்றே வரம்ஒன்று தந்தாள்
கல்யாண வைபோகம் கபாலி கற்பகம்
கண்கண்ட அற்புதம் கடைத்தேற்றும் நற்பதம்

திருமயிலை ஒரு கயிலாயம் — அங்கே
தேவாதிதேவர் எல்லாம் சரணாலயம்

(வேறு)

உமையவள் திருமயில்
வடிவெனச் சுடர்விடும்
ஓம்சக்தி கற்பகமே

உயிர்வளம் செழித்திட
உவந்தருள் புரிந்திடும்
ஓம்சக்தி கற்பகமே

இமயவன் தவக்கொடி
விடையவன் மலர்க்கொடி
ஜெயசக்தி கற்பகமே

இனிமையில் தனிமையில்
ஒருமையில் கனிந்திடும்
ஈஸ்வரி கற்பகமே

அமுதக் கலசக் கும்பம்
நலந்தரத் துலங்கிடும்
அம்மையே கற்பகமே

அருவியில் அனலென
அனலினுள் புனலென
அருட்சுடர் கற்பகமே

தமிழொடு பழகியத்
தவநெறிப் புலவர்கள்
துதித்திடும் கற்பகமே

திருவிழாத் தினம்தினம்
தேவர்கள் வாழ்த்திடும்
தேவியே கற்பகமே

அறுபத்து மூவரின்
அருள்திறம் சிறந்திடும்
அபிராமி கற்பகமே

ஆனந்த ஞானப்பால்
சம்பந்தர் துய்த்திடும்
தோகையே கற்பகமே

குறுநகைத் திருமுகம்
சிறுவிழிப் பார்வையில்
சீர்வளர் கற்பகமே

குருவருள் நிறைந்திட
குவலயம் புகழ்ந்திடும்
கோபுரக் கற்பகமே

குங்குமத் தாமரைத்
திருவடி நான்மறை
தொழுதிடும் கற்பகமே

குன்றத்தில் ஆடிடும்
குமரனின் வேல்அருள்
சக்தியே கற்பகமே

சங்கமனம் வளர்க்கும்
சங்கநிதி பெருக்கும்
சந்நிதி கற்பகமே

அங்கம் பூம்பாவை
அருளின் இமயம்என
அற்புதக் கற்பகமே!

(வேறு)

அருள் வடிவான கற்பகமே
அழகிய மயிலே கற்பகமே
கருணைக் கடலே கற்பகமே
கபாலிக் கொடியே கற்பகமே

குங்குமத் தாயே கற்பகமே
கோடிச் சுடரே கற்பகமே
சங்கரன் பங்கே கற்பகமே
சர்வமும் நீயே கற்பகமே

குழந்தை மொழிதான் புரியாதோ
கூப்பிடும் குரலும் கேளாதோ
கும்பிடும் கைகளைப் பாராயோ
குறைகள் யாவையும் தீராயோ

இமயக்குமரி கற்பகமே
இதயத் தெய்வம் கற்பகமே
உமையே தாயே கற்பகமே
உனக்கு நானே அர்ப்பணமே

நந்திமத்தளம் முழங்கவரும்
நாரதகானமும் இயைந்துவரும்
இந்திரத்தேவர்கள் வணங்கவரும்
ஈஸ்வரியே சிவசங்கரியே

வேதத் தருவே கற்பகமே
வள்ளுவர் வாயிலார் கற்பகமே
ஆதிரைத் திருநாள் காணவரும்
அம்மா ஞானக் க கமே

3/3

கல்வியும் தனமும் தருவாய்நீ
நல்வழி அருளும் தாயேநீ
வல்விணை தீர்த்து வாழ்விக்கும்
வாலைக் குமரி கற்பகமே

கூடல்நகரில் மீனுட்சி
கங்கைக்கரையில் விசாலாட்சி
காஞ்சிநகரில் காமாட்சி
கற்பகசக்தி அரசாட்சி

கோலத்தவமே மயிலாகக்
கோயில் கொண்ட கற்பகமே
சீலக்கண்ணியர் நிறைவாகச்
செவ்விதழ் முறுவல் புரிவாய்நீ

சித்தம் உன்னிடம் கற்பகமே
சேய்நான் வைத்தேன் கற்பகமே
சத்தியம் நிற்கும் பொற்பதமே
சரணம் அம்மா கற்பகமே!

—கபாலீஸ்வரம்—

சதாசிவக் கபாலீஸ்வரம்
சம்பந்தர் புகழ்ஷேத்திரம்
சிதாகாச நிலைவழங்கிடும்
சிவயநம என்னும்மந்திரம்

நலம்பொங்கக் கூத்தாடும்
நர்த்தன விநாயகர்
உலகெங்கும் ஓம்காரநாதம்
ஒலித்திடும் சிங்காரவேலன்

மனக்கோயில் அருள்வாயிலார்
மயிலன்னை துதிபாடுவாள்
கனித்தமிழ் திருவள்ளுவர்
குறள் ஆட்சி முடிசூடுவார்

கற்பகத் திருச்சோலை
கானமா மயிலை
ஞானத்தவம் சிறக்கும்
நற்பதக்கனி கிடைக்கும்

ஆலயத் திருக்கோபுரம்
அற்புதப் பொற்கலசம்
பாலய இசைக்கோலம்
பக்தரின் நற்கவசம்

கோபுரத் தரிசனம்
பாப விமோசனம்
கும்ப நன்னீர் ஆடல்
அம்பிகை அருள் ஆடல்

ஆதிசதாசிவன் கபாலியே
ஆதிரைப் பெருமான் கபாலியே
வேதமந்திர நிதிக் கபாலியே
ஜோதிப் பரம்பொருள் கபாலியே

ஆடும் மயில் பாடும் கபாலியே
ஆனந்தக் கூத்தன் கபாலியே
தேடும் மறைப்பொருள் கபாலியே
திருஞான சம்பந்தக் கபாலியே

கொன்றை மதிசூடும் கபாலியே
கங்கைநதி பொங்கும் கபாலியே
மன்றில் நின்ருடும் கபாலியே
மரகதக் கற்பகக் கபாலியே

அகத்தியன் போற்றும் கபாலியே
அகத்தே சுடரும் கபாலியே
சுகத்தே சுகிர்க்கும் கபாலியே
சப்தசிவ தீர்த்தக் கபாலியே

மனத்தால் துதித்தால் அருள்
புரிவான்
மாதவப் புரத்தான் கபாலியே
கணத்தால் கணத்தில் துணை
வருவான்
கணபதிக் குமரன் கபாலியே

நந்தி பதம் பாடும் கபாலியே
நாத விந்துக் கலைக் கபாலியே
சிந்தை நிறைச்செல்வம் கபாலியே
சீர்மிகு மயிலைக் கபாலியே!

அன்னையின் அநேக ரூபங்கள்

பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன்

தெய்வீகம் என்பதென்ன? — உண்மைத்
தெய்வத்தின் தன்மை என்ன?
தெய்வீக வழிகள் என்ன? - நெஞ்சத்
தேவா லயம் தான் என்ன?
தெய்வீக அழைப்பும் என்ன? -- ஒன்றே
தெய்வமா பலவா என்ன?
தெய்வீகச் சிறப்பும் என்ன? — வாழ்வுத்
தெய்வத்தின் கேள்வி என்ன?

அன்னையின் உருவம் என்ன? — சொல்லும்
அநேகமா ஒன்று என்ன?
நன்மையின் நாதம் என்ன? — தேவி
நாட்டிடும் கருத்தும் என்ன?
வன்மையின் கொடுமை என்ன? — நல்கும்
வாஞ்சையின் கருணை என்ன?
மன்பதை காண்ப தென்ன? — சொல்லில்
வரும் விடை கிளைப்ப தென்ன?

கேள்வி மேல் கேள்வி கேட்டால் — இங்கே
கிடைத்தல்தான் என்ன என்ன?
வாள் நகை அமரத் தாயின் -- எழிலார்
வடி வழ கேற்கும் மாட்சித்
தாள்களில் முகம்ப தித்து — விம்மித்
தவித்தழு தே புலம்பி
ஆள்வினை அருள்க என்றால் — தேவி
அருள் நகை தருவள் என்பேன்!

துடிப்பவர் நெஞ்சின் உள்ளே — அவள்
துணையென வீற்றிருப்பாள்
வெடித் தெழும் ஆற்ற லுள்ளே — அவள்
விளங்கியே அமர்ந்திருப்பாள்
தடித்தனத் திமிருக் குள்ளே — தீத்
தனலென எரிந் தழிப்பாள்
இடியென முழங்குவாளே — பொய்மை
இருளினைப் பொசுக்கு வாளே!

(வேறு)

தேவியின் வடிவினைச் செப்பிடுங்கால் — இன்பச்
சிந்தை மகிழ்ந்து மலருதம்மா!
தாவியே அன்பு தழைக்குதம்மா — நல்ல
தகைமையே பெருகி ஓங்குதம்மா
மாவிலைத் தோரணப் பந்தலிலே — கோயில்
வாயலில் வாழும் அழகினிலே
தேவியின் வருகையின் சிறப்பினிலே — உள்ளம்
தேனருவி போலப் பாயுதம்மா!

மஞ்சள் முகமுடை மங்கையர்கள் — வந்து
வணங்கிட பக்தி வளருதம்மா!
பிஞ்சுக் குழந்தைகள் பேச்சினிலே — உன்றன்
பேருலாக் காட்சி திகழுதம்மா!
கொஞ்சும் திறமுடை அன்பரிலே — நின்றன்
கொள்கை பிறங்கி ஒளிருதம்மா!
செஞ்சொற் கவிவாணர் கவிதையிலே — நீயோ
சிறக்கவே ஆடிடக் கண்டேனம்மா!

வஞ்சமிலாப் பக்தர் நெஞ்சினிலே — கூடும்
வாய்மைத் திருவருள் ஓங்குமம்மா
கஞ்சிக்கே வழியின்றித் தவிப்பவர்கள் — வாழ்வில்
கலந்துமே உறவாடி நிற்பாயம்மா
பஞ்சைப் பராரியாய் எவருமின்றிப் — பொதுமை
படைத்திட அருள் முகம் காட்டுமம்மா
தஞ்சமெனத் தினம் தொழுபவர்க்கே — உன்றன்
தயவினைப் பொழிந்துமே புரப்பாயம்மா

எண்ணியே நித்தம் கசிந்துருகும் — நல்லார்
இதய வீணை இருப்பிடமே
கண்ணீர் வடியக் கசிந்துருகும் -- அன்பர்
கவலை மடிக்கும் மா மருந்தே
கண்ணிய மிக்கவர் வாழ்க்கையிலே — ஓங்கிக்
கற்பகத் தருவாய் அருள் சுரந்தே
எண்ணஞ் சிறந்தவர் மாட்சியிலே — வாழ்வு
ஏற்ற முற்று நிற்கப் பாடிடுவோம்

ஓம்

ஆதி பராசக்தி

(திருமதி. சௌந்தரா கைலாசம்)

மாலவனின் தங்கையென நீபிறந்து வந்து
மாதேவன் மனம்கவர்ந்து பாகமிடம் கொண்டாய்
வேலவனை வளர்த்தெடுத்து மேதினியில் தீமை
வேரறவே வீழ்ந்துவிடப் பேருதவி செய்தாய்!
காலடியில் தலைவணங்கும் உயி களுக்கே அபயக்
கரம்காட்டி அருள்பொழிய பிராமிஎனத் திகழ்வாய்!
சீலமுறு நெஞ்சிலுறை ஆதிபரா சக்தி!
திருவுடன்நல் அறிவுயரத் துணைவருவாய் தாயே!

வெளியதனில் சுழலுகிற அண்டங்கள் எல்லாம்
விளையாட்டுப் போலஒரு விரலசைவில் படைத்தாய்!
ஒளிபரவத் தீயதுவும் உயிர்க்காற்றும் நீரும்
உயர்வானும் மண்ணதுவும் உன்விழைவில் சய்தாய்!
தெளிவருளி மானுடரின் சிந்தையுளே நின்று
தெவிட்டாத பேரின்ப நல்லுணர்வு தருவாய்!
எளியவரும் ஏற்றமுறும் வண்ணமருள் நல்கும்
இனியவளே ஆதிபரா சக்திகழல் போற்றி!

யானைகளின் படைத்தலைவி ஸம்பத்கரி ஓங்கும்
அஸ்வங்களின் படைத்தலைவி அஸ்வாருட தேவி,
சேனைகளின் தலைவியெனத் திகழ்கின்ற வராஹி,
திறமைமிகு மந்திரியாய்ச் சிறந்திடுமா தங்கி,
நானிலமீ துயர்வுடைஇந் நால்வருமே அன்னை
லலிதையுனக் கமைந்திருக்கும் நான்குகரம் போல்வார்,
ஞான மெனும் அக்கினியின் குண்டமதில் தோன்றி
நாளுமருள் வழங்குகிற நாரணியே வாழி!

ஆத்தியுடன் முள்கிளுவை, முல்லை,மா, வில்வம்
ஆகியவை கொண்டுநிதம் அர்ச்சிக்கப் பெறுவாய்!
பூத்தஎழில் தாமரையும் முல்லை,மாம் பூவும்
பொற்புடை நீ லோத்பலமும் அசோகநறு மலரும்
காத்தருளும் கரம்தனிலே பாணமெனக் கொள்வாய்!
கனிவுடனே எட்டுவகைச் சித்திகளைத் தருவாய்!
தோத்திரங்கள் செய்துபெறும் சித்தரெலாம் கூடித்
தொழுதிடுசித் தேஸ்வரியே சூலினியே வெல்க!

யாகமதை விரும்பிடுவாய்! தீவினையின் குவியல்
அத்தனையும் பொசுக்கிடுவாய்க் கருணைமிகு கடலே!
தேசமதால், இயற்கையினல், தேவதைக ளாலே
சேர்கின்ற துன்பமெலாம் தீர்த்தருளும் தேவி!
ஆகமென ஸ்ரீவித்தை அட்சரங்கள் பத்தோ(டு)
ஐந்ததனைக் கொண்டவளே ஒப்பரிய தாயே!
போகமுடன் வீடுதரும் ஸ்ரீவித்தை அதற்குப்
போற்றும்அதி தேவதையே புராதனியே போற்றி!

தந்திரங்கள் அறுபத்து நான்கிற்கு மேலாய்
தந்திரமாய் அமைந்திருக்கும் ஸ்ரீவித்தை அதனின்
மந்திரஸ்வ ரூபிணியே! ஸ்ரீ சக்ர ராஜ்ய
மகிமைமிகு யந்திரத்தில் நிலைத்திருக்கும் தாயே
சிந்தையொன்றி மூன்றுமுறை மந்திரம் "ஹ்ரீம்" அதனைச்
சீருடனே ஓதுவதை நீ விரும்பி நிற்பாய்!
சுந்தரம்சேர் ஸ்ரீசக்ர முக்கோணத் துள்ளே
சுடருமொளி மயமான பைரவியே வாழி!

தேசுடைய தெய்வதத்தைத் தெரிவித்து நிற்கும்
திகழ்வுடைய பீஜமது "ஹ்ரீம்"என்ப தாகும்
பேசுகின்ற நான்மறையின் சாரம் "ஹ்ரீம்" கார
பீஜமதைப் பீடமெனக் கொண்டிலங்கு கின்றாய்!
மாசறவே 'ஹ்ரீம்'என்ற மந்திரத்தை ஓதி
வணங்குபவர் தமைக்கண்டு மகிழ்ச்சி மிகக் கொள்வாய்!
பூசரிகை ளுக்குரிய பிரணவத்தின் பொருளாய்ப்
புவியிதனில் விளங்குகின்ற புண்ணியளே போற்றி!

மலையாத மனங்கொண்டு வந்ததுயர் எல்லாம்
மறைந்தொழியப் போர்புரியும் திறனருளும் துர்க்கா!
விலைபோட்டு வாங்கிடவே முடியாத நிறைவும்
வேண்டுகின்ற மனமகிழ்வும் தந்திடு'ஹ்ரீம்' காரி!
தொலையாது கர்மவினை மண்ணுலகில் மீண்டும்
துயர்ப்பிறவி எடுப்பதனைப் போக்கிடும்ஓம் காரி!
அலைசூழும் உலகில்மறு பிறவிஎடுத் தாலும்
அன்னையுனை மறவாத வரமருள்வாய் காளீ!

நன்மையெலாம் தந்தருளும் நாயகியாய் நின்று
நானிலத்தை வாழ்விக்கும் உமையவளே தாயே!
உன்னுடைய நாமமெனும் பீஜமதை எங்கள்
உள்ளமெனும் பூமியிலே ஒழுங்குடனே நட்டோம்!
அன்புநிறைப் பக்தியெனும் நீரதனை வார்த்தோம்
அற்புதமாய் அதுசெழித்து வளர்ந்தோங்கக் கண்டோம்!
எந்நாளும் அதன்நிழலில் இருக்கின்ற எம்மை
எவரென்ன செய்துவிட இவ்வுலகில் முடியும்?

எங்கேனும் உனைப்பணிவார்க் கிடரேதும் வந்தால்
எழுந்தோடி ஒருநொடியில் துயரதனைக் களைவாய்!
சிங்கார விழிகளிலே கருணையது பொங்க
தேடிவரும் அடியவரை வாரியணைத் திடுவாய்!
மங்காத நிலையுன்றன் மதலையர்எம் வாழ்வில்
மலர்ந்தென்றும் மணமோங்க வழிகாட்டி நிற்பாய்!
இங்கேஉன் எழிற்பாதத் தாமரையில் எங்கள்
இதயத்தை வைத்துருகித் தொழுகின்றோம் தாயே!

வையாசி அங்காளியே

கவிஞர். வி. மு. உலகநாதன்

அன்னையே தெய்வமே அனைத்துயிர் உய்யவே
அகிலத்தைப் படைத்த ளித்தே
அருளினைப் பொழிந்துமே அமைதியைத் தந்துமே
அற்புதம் விளைக்கும் அறிவே
இன்பமும் துன்பமும் இன்றியே கிருதயுகம்
இவண்தோன்ற வைத்து மாண்பாய்
இலாதவர் இருப்பவர் எனுங்குறை தவிர்த்திட
இன்றுநீ கருணை செய்க
மின்னொளி வீசிடும் மேன்மையில் திகழ்ந்திடும்
விட்டலகோ பால புரத்தில்
விளக்கமுறும் வையாசி வையமிசை நல்லாசி
விரிக்கும்விசு வாசி நீயே
நன்னெறி மார்க்கமே நாடெங்கும் பரப்பிட
நயந்துமே சென்னை போந்தே
நலமருள் சூளையில் அங்காள தேவியாய்
நகைகாட்டி இலங்கும் ஒளியே!

அரும்பென மலரெனக் காயெனக் கனியென
ஆகியே அன்பர்க் கெல்லாம்
ஆவலுறத் தந்திடும் ஆனந்த சத்தியே
ஆன்மீகம் அருளும் நலமே
அருமையுன் நிலையினை அறிந்தவர் பரவியே
அகத்தினைப் பண்படுத்தி
அரும்பென மலரெனக் காயெனக் கனியென
ஆனவர் கனிந்த நெஞ்சில்
இருந்துமே ஆடிடும் எளியவர்க் குதவிடும்
இறங்கிவந் தருளும் உறவே
இன்னலால் உழைப்பவர் கரத்தினில் இலங்கியே
இனியபொருள் படைக்கும் திருவே
பெருமையில் ஆடியே விட்டலகோ பாலபுரம்
பிறங்கும்வை யாசி யுமையே
பிரியமாய்ச் சூளையில் அங்காள தேவியாய்ப்
பீடுடன் விளங்கும் ஒளியே!

இரவினில் பகலினில் கண்வள ராமல்நீ
இருத்தற்குக் கார ணம்என்?
இரவெனப் பகலெனப் பாராமல் உழைத்துநலம்
இனிதருளும் தொழிலா ளர்கள்
சிரமத்தைக் கருதியே கண்வள ராமலே
சிங்கநிகர் நோக்கி னாலே
தினமிங்கே உழைக்காமல் செல்வத்தைக் குவிக்கின்ற
திருடரைக் கடிய வீரக்

கரத்தினில் சூலத்தைக் காட்டியே கயவரைக்
    கடிதினில் திருந்த வைத்தே
கனிவுடன் உழைப்பவர் கருத்துடன் துதிப்பவர்
    களிப்புடன் திகழ்வ தற்கு
வரந்தர விட்டலகோ பாலபுர வையாசி
    மகிழ்ந்துமே சூளை தன்னில்
வதிந்திடும் அங்காள தேவியே நயந்துநலம்
    வழங்கிடும் அழகின் ஒளியே !

எனையீன்ற தாயிடம் உன்செயல் தனைக்கண்டேன்
    இனியதாம் தொண்டு கண்டேன்
இன்சொல்லை, பொறுமையை, எடுத்தருளும் பண்பினை
    எழில்முகம் தன்னில் கண்டேன்
மனையினை இயக்கிடும் மாட்சிமை உழைப்பினை
    வழங்கிடும் மெய்யில் கண்டேன்
மாதேவி உனைப்போன்ற பெண்அவர் மக்களை
    மகிழ்வுறப் பேணக் கண்டேன்
தினமுமே நலஞ்செய்தும் திட்டுந்தம் மக்களைச்
    சீருமல் கொஞ்சக் கண்டேன்
சிறந்தஎன் தாயுக்கும் தந்தைக்கும் மற்றவுயிர்
    தமக்கும்நீ தாயே யாகி
வினையினை ஆற்றிட விட்டலகோ பாலபுரம்
    விழைந்தவை யாசி நீதான்
மேலோர்வாழ் சூளையில் அங்காள தேவியாய்
    மிளிர்ந்துயர்வு நல்கும் ஒளியே !

ஒழுக்கமே கொண்டுளார் உள்த்தினில் வழுவிலார்
    உண்மையைப் பேசி வாழ்வார்
உறையும்நின் கோயிலில் உவந்துவந் தேத்துவார்
    உத்தமர் தம்மை ஏய்த்தே
அழுக்காறு மனத்தினர் சேவலம் செய்பவர்
    அமைதியை அழிக்கும் தீயர்
ஆசையால் கொள்ளையும் கள்வமும் கொண்டுள
    அற்பரின் கொடுமை யாலே
விழுமிய மன்பதை மெலிவினை யுற்றதால்
    மிகுந்தபேர் வறுமை எய்தி
வேதனை யுற்றனர் சோதனை மாற்றிட
    வீறுகொண் டெழுக தாயே
வழுவினோர் திருந்திட விட்டலகோ பாலபுர
    வதியும்வை யாசி நீதான்
மாண்புடைய சூளையில் அங்காள தேவியாய்
    மாவீரம் காட்டும் ஒளியே !

ஓடவும் ஆடவும் உலகிடைத் திரியவும்
    ஓசையுறப் பாடி யாடி
உள்ளமே குளிர்ந்திட ஒருவரைப் போற்றியே
    உரைத்துமே ஏத்தி நன்மை

தேடவும் தொழிலினைச் செய்யவும் சிறப்புறத்
திகழவும் பொருளை யீட்டும்
சிந்தையால் வாணிபம் புரியவும் நண்ணியே
சிரிப்புடன் பேசி பிறரை
நாடவும் நல்லதி காரியாய் விளங்கவும்
நடிப்பவர் உடைய நாட்டில்
நாளுமே பசியினல் துடிப்பவர் வழியின்றி
நலிபவர் துயரை மாற்றி
வாடாமல் இருக்கவே விட்டலகோ பாலபுர
வையாசி அருளைச் செய்ய
வளர்தமிழ்ச் சூளையில் அங்காள தேவியாய்
மணம்வீசித் திகழும் ஒளியே!

கற்றலும் கேட்டலும் கற்றவழி நிற்றலும்
கவினுற உரைத்து மிகவே
கனிந்தநல் மனத்தினல் கடமைகள் ஆற்றிட
கருணையை உணர்த்தி நிற்கும்
அற்புதத் தாயுனை அறியாத மூடராம்
அற்பரே உணர்ந்தி டாமல்
அன்னையே உன்னையே இல்லையே என்றுமே
அழிவுநாத் திகம்உரைப்பர்
குற்றமே விளைப்பவர் கொடியவர் மாறிடக்
குங்குமச் சிவப்பு மின்ன
கூரம்பு விழிகளைக் காட்டியே நலமருள்
குணவதி கொள்கைக் குன்றே
கொற்றவை விட்டலகோ பாலபுர வையாசி
கோவிந்தன் தங்கை நீதான்
குலவியே சூளையில் அங்காள தேவியாய்க்
குறைதீர்க்க வந்த ஒளியே!

கணிகண்ணன் தமிழுக்குக் காஞ்சியில் வரதனே
கனிந்துவந் தடிமை யாகிக்
கணிகண்ணன் பின்னாலே கவிகேட்டுச் சென்றவன்
கண்ணனே உன்றன் அண்ணன்
பணிவுடன் உனைப்பாடிப் பரவும் உலகநாதனின்
பைந்தமிழ்க் கடிமை யாகிப்
பசுமைசூழ் விட்டலகோ பாலபுர வையாசிப்
பரிதிநீ என்றன் பின்னே
தணியாத ஆர்வமுடன் சூளைக்குப் போந்தனைத்
தாயேஅங் காள தேவி
தம்புச் செட்டித் தெருவில் உன்வாசல் அரங்கினில்
தனயன்என் பாட்டை கேட்க
அணித்திகழ் காளிகாம் பாள்உன்றன் கணவனுடன்
அமர்ந்துமே வாழ்த்தும் அன்னாய்
அகிலத்தில் எங்குமே இருந்துநீ அறங்காக்கும்
ஆதார இன்ப ஒளியே!

சமத்துவ மாகவே மக்களே உய்யவே
தந்தனை அனைத்துப் பொருளைத்
தருக்கரே கவர்ந்ததால் தரணியில் சமத்துவம்
தலைகீழாய் மாற்ற மெய்தி
அமைதியே குலைந்தது வறுமைபலர் உற்றனர்
அநீதியர் மிகஉ யர்ந்தார்
அல்லலைப் புரிபவர் மாறிட தடங்கண்ணின்
ஆற்றலைக் காட்டு முனைந்து
சமயங்கள் அனைத்திலும் சத்தியாய் ஒளிரும்உன்
சமரசம் நோக்கம் அறியார்
சமயாதி பேதமே செய்தனர் சுமடரே
தன்னலர் திருந்தி வாழ
அமர்ந்திடும் விட்டலகோ பாலபுர வையாசி
அழகான சூளைப் பதியில்
அங்காள தேவியாய் அமைந்துமே சமதர்மம்
அளிக்கவே வந்த ஒளியே !

நீரெனக் காற்றென நிலமெனத் தீயென
நெடிதுயர் வான மென்ன
நீகண்டு ஐம்பெரும் பூதத்தால் ஞாலத்தை
நிகழ்த்தவே படைத்த ளித்தாய்ப்
பேர்பெற்ற பொருளைந்தால் உலகினை இயக்கவே
பிறந்திட உயிர்கள் செய்தாய்ப்
பின்னர்அவ் வுயிரெலாம் நிர்மூலம் ஆனபின்
பேசும் ஐம் பூத மிடத்துச்
சீர்பெற வைத்துமே சிறப்புற விந்தைகள்
செய்துமே மீண்டும் உயிர்கள்
செகத்திடைத் தோன்றவே வளரவே வாழவே
சிறக்கவிளை யாடும் தாயே
நேர்மைவாழ் விட்டலகோ பாலபுர வையாசி
நித்தியப் பொருள தாகி
நேர்த்தியாய்ச் சூளையில் அங்காள தேவியாய்
நிலைத்துநலம் விளைக்கும் ஒளியே !

நூற்றண்டு விழாவினைக் காண்கின்ற பாரதி
நுண்மாண்ஒண் நுழைபு லத்தால்
நுவன்றுன்னைப் பாடினர் ஆடினர் உன்பெருமை
நொடிபோதும் மறந்தி டாதார்
ஆற்றலை நீதர அடைந்தவர் பராசத்தி
அடியராய்த் தம்மை யாக்கி
அன்னையே பாடினர் அவரைப்போல் பாடினர்
அகிலத்தில் எவரு மில்லை
மாற்றமே இன்றிநீ மாத்தமிழ்ப் பாடலை
வளமுற அவரே பாட
வந்தருள் புரிந்தனை இறவாத புகழ்தனை
மகிழ்ந்துமே அளித்த நீதான்

போற்றினை விட்டலகோ பாலபுர வையாசி
பூரித்துச் சூளை பதியில்
புகழோங்க இருக்கும்நீ பாரதியாய் யான்பாடப்
புரிகவே அருள்க ஒளியே !

மதியெனும் நிலவினுக் குவமையாய் நின்னையே
மதித்துமே பாட்டி சைப்பர்
மதியினைப் பெற்றுள மாந்தரே உனைப்போற்றி
மதித்துமே துதித்து வருவார்
மதியெனும் நிலவினில் மறுவுள தாதலால்
மதியுனக் கொப்பில் லையே
மாசிலாச் சுடரொளி மழைதரும் கண்ணனின்
மனத்திற்கே இனிய தங்காய்
கதியென இருந்துநீ களிப்புற உலகினைக்
கவினுற நடத்து பவள் நீ
கண்சுடர் காட்டியே கயமையைக் கொளுத்திடும்
கண்கண்ட தெய்வம் இன்பப்
பதியெனும் விட்டலகோ பாலபுர வையாசி
பார்தனக் காசி கூறப்
பாங்குடன் சூளையில் அங்காள தேவியாய்ப்
பயன்தரும் அமுத ஒளியே !

மொழிகளில் முதன்மையாய்ச் சால்பருள் தமிழேபோல்
மொழிமுதற் றெய்வம் நீதான்
மொழித்தமிழ் சிறப்புப்போல் சீரிளமை யுற்றல்போல்
முழுமையெழில் பெற்ற அன்னை
அழிவிலாத் தமிழேபோல் அறமொடு திகழும்நீ
அருமைமொழி தன்னில் ஒளிரும்
அம்மொழியைப் பயிலாமல் பிறமொழியில் பயில்கின்ற
அற்பரின் நிலையைக் கண்டு
விழிபெரிய தாக்கியே வேதனை காட்டிநீ
வீணர்கள் மாற்ற மெய்த
மேலான தமிழினில் மகிழ்ந்துமே பயின்றிட
விழைவினை ஊட்டும் அமுதே
மொழித்தமிழ் காத்திடும் விட்டலகோ பாலபுர
மோகனவை யாசித் திருவே
முனைந்துமே சூளையில் அங்காள தேவியாய்
முடிவிலா திலங்கும் ஒளியே !

காசி அன்னபூரணி

(பாரதி காவலர் கே. ராமமூர்த்தி)

மறைமொழி தனிலுறை பொருளினை
மாதவப் பேற்றினை—தாயினை
வரையறை முடிவுகள் வைத்திடா
வளம்பல வழங்கிடு அருளினை

இறைமுடிக் கொலுவென ஒளிர்தரு
இன்னறு நீர்த்துறை கங்கையின்
கரைதனில் கருணையின் வடிவெனக்
காசியில் அமர்ந்திடு அரசியை,

தரைதனில் நீரினில் விண்ணதில்
தவழ்ந்திடு உயிர்களை ரக்ஷணை
குறைவறப் புரிந்திடு பூரணி
குவலயம் நித்தியம் புசித்திட

பொறையொடு உணவினைப் படைத்தவள்
பொன்மணி தருபவள் காப்பவள்
இறைவடி வானவள் அவனியை
இதமொடு பாலனம் புரிபவள்

(வேறு)

காசிகாசி காசிஎன்று நினைத்ததுமே
காசிவாசம் புரிவதற்கு முனைந்ததுமே
காசிவாசம் பலனும்கூடிப் பெருமைசேரும்
காலகால ஜீவகங்கை அருமைகூறும்

கொடிகளிங்கு கற்பகத்தின் கொடிகளாகும்
கற்கள்யாவும் தெய்வச்சாரப் படிகளாகும்
மடியும்போது ராமநாமம் செவியிலூறும்
மணலுமிங்கு பிரஸாதப் புதையலாகும்

ஜோதிலிங்கக் காசிவிஸ்வ நாதர்தந்தை
விசாலாட்சி தாயின்பாதம் நாடும்சிந்தை
வேதஞான கங்கையன்னை சித்தியாவாள்
மணைவிளக்கி மாட்சிகட்கு புத்தியாவள்

துண்டிவிநா யகர்மூத்த சோதரராம்
தண்டபாணி பைரவரும் ஆதரவாம்
அண்ட சரா சரம்யாவும் கங்கைமேலாம்
இங்காற்றும் நற்பணிநம் பிள்ளைகளாம்

நூறுகோடி நதிகளில் ஸ்நானங்களோ
நோன்பாகும் வேதாகம காலங்களோ
நூறுநூறு அஸ்வமேத யாகங்களோ
அன்னயாவும் அளிக்கின்ற சீலங்களே

ஞானரூப மணிகர்ணி தந்திடுவாள்
ஞானஒளி தீர்த்தமென வந்திடுவாள்
ஞானசாந்தி தீரமங்கு நீராடினேம்
ஞானதாரை ஆதிகங்கை சீராடினேம்

சங்கரரும் கங்கைபுகழ் தோத்தரித்தார்
தங்கக்கவி பாரதியும் பாத்தொடுத்தார்
மங்கைபாகன் மகாதேவன் வேண்டிநின்ற
மலரன்ன பூரணியைத் துதிக்கின்றேன்

கனல்கின்ற செக்கர்சேர் ஜோதியாவாள்
கணவனுக்காய் தக்கனிடம் வாதிட்டாள்
மனங்கவரும் அருள்நெஞ்சம் உடையவளாம்
மங்காத ரத்னஎழில் படைத்தவளாம்

இனமறிந்து அடியவர்க்குப் பலம் தருவாள்
எப்போதும் மங்களமாய் நலமருள்வாய்
காசிபுரத்து அரசிஅன்னபூரணி மாதா
கருணைகொண்டு நீ பிச்சையிடுக அம்மா



சமயபுரம் மாரியம்மன்

(கவிஞர் வேதம்)

சுற்றிடும் பூமிக்குள் அற்புதம் தந்ததில்
சொர்க்கம் படைப்பவளோ—சக்தி
சூட்டி மகிழ்பவளோ—நீர்

வற்றிடும் பாலையில் எங்கோவூர் ஓரத்தில்
வாழ்க்கையும் சேர்ப்பவளோ—தன்
மாயத்தைக் கோப்பவளோ

ஈர்ப்பெனும் மூச்சினுல் கோள்களனைத்தையும்
ஏந்தி அருள்பவளோ—நம்முள்
இணைக்கவும் செய்பவளோ—மண்ணைப்

பேர்த்துப் பெருமலை ஆக்கிஅவ் வானைப்
பிடிக்கவே வைத்தவளோ—அருவி
பீறிடச் செய்தவளோ

சித்தாந்த வேதாந்த நாதாந்த வார்த்தையில்
சிக்கா திருப்பவளோ—அன்பில்
சிக்கிக் கிடப்பவளோ—சக்தி

பித்திலே சொல்கின்ற பாட்டிலே உண்மையின்
பீடம் படைப்பவளோ—அருள்
பாடம் கொடுப்பவளோ

சக்தீசக் தீ என்றே எந்தநம் பாடல்கள்
தாகம் கிளப்பிடுமோ—அருள்
வேகம் உசிப்பிடுமோ—அந்தத்

திக்கைஎன் கண்களால் பார்த்தாலே என்னுளே
தேனின் சுவை பிறக்கும்—என்
தேகம் கிறுகிறுக்கும் !

பாம்பெனும் சின்னமாய்க் காட்டிநம் மேனியில்
படமாடிச் செல்பவளோ—யோக
நடமாடிப் பார்ப்பவளோ—என்றும்

வீம்புகள் செய்கின்ற நாத்திகர் வாழ்வினில்
வேடிக்கை செய்பவளோ—நாம்
நாடிக்கை கூப்பிடுவோம் ! !

தீராத வினைதீர்ப்பாள்! வந்த நோயைத்
தேய்த்திடுவாள்! காத்தருளவாய்! அன்பு செய்வாள்!
நேராக அவளைஎண்ணும் சமயம் நம்மை
நிச்சயமாய்க் காப்பதனால், சிறந்த "கண்ண

னூராகும்" பழம்பேரை மாற்றிக் கொண்டாள்!
உவப்பான "சமயபுரம்" எனும்பேர் கொண்டாள்
பாறுங்கல் கசிவுகளே அருவி ஆகும்!
பயங்கரியாம் மகமாயி, அன்னை ஆனாள்!

தாமரையின் கர்ப்பப்பை குளமே ஆகும்!
தவறிவீழ்ந்தோர் கல்லறையும் அதுவே ஆகும்!
தீமைசெய்யும் நாத்திகர்க்கே அன்னை கையின்
திரிசூலம், கத்தி, அம்பு, பயத்தை நல்கும்!

'சேமமுற வேண்டுமென்றே' அகந்தை போக்கி,
திருவடியில் வீழ்வோர்க்கு மலராய் மாறும்!
ஆமைகள்போல் படரும்வை சூரி கூட
அன்னையின்கண் பட்டுவிட்டால் ஓடிப் போகும்!

திருச்சிக்கு வடக்கிலெட்டு மைலில் உள்ள
தெய்வீகச் சமயபுரம், பேச்சில் மெய்யைத்
திரித்துநம்மை ஏய்ப்பவர்க்கு நோயைத் தந்தே
திருத்துபுரம்! திருமாலின் தங்கை யாக

அரங்கம்என்ற ஊரைவிட்டுக் காட்டில் வந்தே
அதிசயமாய் விசய்நகர மன்னர் மூலம்
சிறப்பாகக் கோவில்பெற்றாள்! பேரும் மாறி
திரு "மாரி" என்றானாள்! மழைபோல் காத்தாள்!

தலையில்மகு டம்விளங்க, அருளைக் கண்கள்
தாரைஎனப் பொழிய,அன்பைத் தரும்சி ரிப்போ
கலைஅழகாய் உதட்டிலூற, எட்டுக் கைகள்
கபாலம், கத்தி, மணிமாலை, உடுக்கை, அம்பு,

குலைநடுக்கும் சூலமொன்று பற்றி, தீதின்
கூர்அறுக்க, இடப்பாதம் பீடம் தன்னில்
அலைபோல மடிந்திருக்க, வலக்கால் கீழே
ஐந்தசுரர் தலைநசுக்க, 'பெரிய காட்சி'!!

காஞ்சி காமாட்சி கவின் மாட்சி!

(கவிஞர் மதிவண்ணன்)

பராசக்தி எங்கெங்கும் பரவும் சக்தி
பரமசிவன் தினம் தினமும் நினைக்கும் சக்தி
தராசினெரு தட்டில் தாய்அமர மற்ற
தட்டில்பிற தெய்வங்கள் அமர்த்திப் பார்த்தால்
விரைவாகத் தாய்தட்டே தாழும்! சக்தி
வெளிச்சத்தில் பிறவெளிச்சம் மங்கும்; தேவி
கரம்கண்ட பின்பே தான் மிகவு யர்ந்த
கறைக் கண்டன் செயலனைத்தும் சிறக்கக் கண்டான்.

அடுக்கான கண்ணுடி முன்னே நின்ருல்
ஆயிரமாய் முகந்தெரிதல் போல நம்மைப்
படைத்தவளாம் பராசக்தி உருவக் காட்சி
பலதலத்தில் பல்வேருய் மதுரை, காசி,
கடலாடும் தென்குமரி, காஞ்சி எங்கும்
கண்மலர்ந்த தாயவளே மாட்சி யுற்றே
அடையாளம் காட்டிடுவாள் சீர்த்தி சொன்னல்
அன்பர் பால் கடைக்கண்ணுல் அருள்சு ரப்பாள்

கோழியெலாம் முட்டையின் மேல் அடையே காத்துக்
குஞ்சுகளை வரவழைக்கும் முத்தெ டுக்கும்
ஆழியிலே செலும் ஆமை நினைத்தால் போதும்
அதுயிட்ட முட்டையெலாம் பொரியும் நீரில்
வாழ்மீனே சினைகளையே கண்ணுற் கண்டால்
மாற்றமின்றி உயிர் பெற்று நீந்தும் நம்மின்
காழ்ப்பகற்றிக் கனிவருளும் காமாட் சித் தாய்க்
கடைக் கண்கள் உயர்வருளி உயர்த்தி வைக்கும்

ஆட்சினைப் புரிவோரைப் புகழ்ந்து பேசி
அவர்துதியே செய்வோரைப் பார்க்கின் ருேம் நாம்
ஆட்சியினைப் புரிவோரே வீழ்வார்! தாழ்வார்
ஆனல்நல் லருளாட்சி நடத்தி மேலாம்
மாட்சியுற்ற காமாட்சி விசால ஆட்சி
மாமதுரை மீனுட்சி பெற்றி போற்றின்
தாழ்ச்சிகளே சேராவே நமது வாழ்வில்
தரித்திரமே பாராமல் சிறந்து நிற்போம்

கணவனையே வழிபடும்நல் மனைவி யர்தம்
கண்களுக்கு மீனுட்சி காட்சி யாவாள்
கணவனையே மிகவுயர்த்தும் மனைவி யாகக்
காமாட்சி காஞ்சியிலே ஆட்சி செய்வாள்
வினைமாட்சி அரசியலில் சிறந்த பீடம்
வீற்றிருந்து கொலுபுரிவாள் மீனுட் சித்தான்
மனைமாட்சி சிறப்புறவே நெல்லைக் கொண்டு
மகிழ்ச்சியுற அறஞ்செய்வாள் காமாட் சித்தாய்

மன்மதனின் கைகளிலே கரும்பு வில்லும்
மலர்கணை யும் இருக்குமென்றே அறிந்துள் ளோம்நாம்
அன்னையவள் காஞ்சியிலே ஏனே இந்த
அம்புவில்லைத் திருக்கரத்தில் ஏந்தி யுள்ளாள் ?
என்றேநாம் எண்ணிடுவோம் சிவன்கண் ணாலே
எரிந்துவிட்ட மன்மதனின் மோக அம்பே !
முன்னவனை மோகத்தில் மயக்கு வார்யார் ?
மூவுலகை இயக்குவிக்க அவளே ஏற்ருள் !

ஒருமையுடன் கணவனையே பூசை செய்தாள்
ஒருவனெனும் சிவத்தினையே தழுவி நின்ருள்
எரிகதிரை. வெண்ணிலவை, தீயை மூன்றை
இலங்கும்தன் கண்களிலே ஏற்ருள் நான்குத்
திருக்கரத்தில் பூங்கணையும் வில்லும் கொண்டாள்
சிறக்கஐங் கரனைஆறு முகனை ஈன்ருள்
திருஏழாம் மோட்சபுரிக் காஞ்சி தேவி
சீர்த்திஎட்டு வார்க்குநவ மணியும் கிட்டும்.

இன்பத்தைத் தருபவளைச் சிவனைப் போல
இளம்பிறையை அணிந்தவளை, அன்பர் மாட்டுத்
துன்பத்தைத் துடைப்பவளை, புதிய வாழ்வு
சுடர்ந்தியங்க அருள்பவளை, கால டிக்கீழ்
அன்புடைய சங்கரரால் சக்க ரத்தின்
அற்புதத்தைச் சந்நிதியில் வரப்பெற் ருளை
என்றென்றும் பதித்திடுவோம் காமாட் சித் தாய்
இணையடியைச் சிந்தையிலே இருத்தி உய்வாம்!



காளிகாம்பிகையே காமாட்சி!

(கவிரத்தினம் தேவி காமாட்சி தாசன்)

கரும்பும் மலரும் கரத்தேந்தி
கருணை விழிகா மேஸ்வரியாய்
விரும்பும் சூலச் சுடரேந்தி
வீரி காளிகாம்பிகையாய்
சுரும்புக் குழலும் மதிமுகமும்
சுருங்கும் இடையும் பெருந்தனமும்
அரும்பும் இதழில் புன்னகையும்
அழகாய்த் தோன்ற வருவாயே.

நீலக் கடலைச் சார்ந்திலங்கும்
நெய்தல் நிலத்துப் பரதவர்கள்
சாலப் பணிந்து பூசித்த
சால்பு நிறைந்த அருந்தவமாம்
காலங் கடந்த கவின்பெருமை
கருதிக் களித்துப் பண்ணிசைக்கக்
கோலக் காளி காமாட்சி
குலவி வாழக் கடைக் கணியே.

எம்மைப் படைத்த எழில்தாயே
இரவும் பகலும் எக்கணமும்
நும்மை என்னுள் ஓர்ந்திடவே
நோனுப் பூசை புரிந்தலைந்தேன்
மும்மைப் பயனுய் மூண்டதுபோல்
முன்னிப் பாடப் பணித்தனையே
செம்மைக் காளி காமாட்சி
சிந்தை ஒடுங்க அருள்வாயே.

வெண்ணீ றணிந்து குங்குமமாய்
விளங்கும் வீர மாசிவாஜி
கண்ணீர் அரும்பித் தொழுதேத்தக்
கனத்த போரில் வெற்றிதந்தாய்
விண்ணீர் பொழிந்து விளைநிலங்கள்
விருந்தாய் மிளிர மாகாளி
உண்ணீர் சுரக்கக் காமாட்சி
உகந்தாட் கொள்ள வேண்டுவனே.

வீட்டு விளக்கில் மிளிர் தெய்வம்
விசுவ கருமர்க் கருள்தெய்வம்
நாட்டு மக்கள் பல்லினத்தார்
நம்பி வணங்கும் குலதெய்வம்
கூட்டும் தெய்வம் கங்காளி
கொடுக்கும் தெய்வம் கோரியவை
காட்டும் தெய்வம் காமாட்சி
கருணைக் கிலக்காய் வாழுவமே.

சென்னக் காளி காமாட்சி
சேவை புரிய பாலிப்பாய் !
அன்னக் காளி காமாட்சி
அமைதி பெருக ஆசிப்பாய் !
வன்னக் காளி காமாட்சி
வாழ்வில் வளமை கோலிப்பாய் !
கன்னல் காளி காமாட்சி
கடைக்கண் நோக்குத் தேவியளே.

அருவாம் நீலி ஆங்காலி
அறஞ்செய் சீலி காமாட்சி
உருவாம் சூலி ஊங்காளி
உந்தும் பீலி காமாட்சி
மருவாம் மாலி மாங்காளி
மாவின் மூலி காமாட்சி
ஒருவாம் தேவி ஓங்காளி
உலகைப் பாலி காமாட்சி !

வாசம் மணக்கும் தம்பலத்தி
வார்த்தை யொன்று வழங்கிவிடு !
நேசம் மணக்கும் அம்பலத்தி
நினைவில் என்றும் நிலைத்துவிடு !
பாசம் மணக்கும் பரசிவத்தி
பணிவா ரோடு பழகிவிடு !
காசம் மணக்கும் கம்மியத்தி
கருணை காளி காமாட்சி !



வேற்காட்டுக் கருமாரியே!

(''கவிமாமணி மஹி'' டி. ஆர். குருஸ்வாமி)

ஆகாயப் பரவெளியில் வாகாயச் சூரியனை
நீ காய வைத்த தென்னே ?
தேகாலயத்தி லெழும் மோகாவே சத்துயரைச்
சாகாட்டி பதம் பணியவும்
மேகாலயத்தி லெழும் மின்னலாய்ச் சக்தியாய்
மோகன நடம் பயிலுவாய்
சாகாத முக்திநிலை நோகாது நான்பெறவும்
நீகாக்க வந்து அருள்வாய்.

தணியாத பக்தியுடன் தனியாக உன்னடியில்
தயவாக நான் பனியவும்
பணியாத முன்விணைகள் பனியாக உருகிவிடப்
பணித்திடும் வேற்கண்ணியே !
கணிப்பற்ற பிறவிகளில் கனிந்துள்ள இப்பதவி
கடைசியாய் முடிய வேண்டி
மணிப் பிள்ளை யாககுவையே மனிதப் பிறவியினை
மயல் நீக்கும் கருமாரியே !

பொருள் சேர்க்கும் வாழ்வினிடை மருள் சேர்க்கும்எம்பணியில்
இருள் நீக்கி ஒளி சேர்க்கவும்
திரள்கின்ற பக்திமனம் திசைமாறிப் பலவழியில்
திறம்பாதுன் விழி காட்டவும்
புரள்கின்ற தினசரியைப் புதிதாக்கி உன் புகழைப்
புகழ்ந்திடும் வரம் நல்குவாய்
அருள்கின்ற அம்மையே ஆனந்த சோதியே
அத்துவித மான வெளியே !


அன்னையே உன்னையே அவனியில் பலஉரு வந்
தன்னிலே கண்டு மகிழ்வோம்
முன்னையத் தீவினைகள் பின்னையத் தொந்தங்கள்
முனைந்தழியச் செய்யும் சூலி
நன்னயத் திரிசூலி, நான்டுகி, நாரணி
நானு விதத் தோற்றமாய்
முன்னிலை நின்று நீ என்னிலை உயர்த்தவே
என்னென்ன மூர்த்தம் ஆனுய்?

கயிலையின் பார்வதி காஞ்சியின் காமாட்சி
கோல விழி காளி உமையே
மயிலையின் கற்பகம் மதுரையின் மீனாட்சி
மாகாளி, மகிமை, நடமே
பயில்கின்ற தில்லையின் சிவகாமி பைரவி
படம் சேர்க்கும் நாகம்மையே!
துயில்கின்ற பேதை மனம் துணிந்தெழச் செய்யவே
துதிக்க பல் உரு வமைத்தாய்!

அக்கினி க்கிரீடமும் அதன் மீது நாகபடம்
அழகா யணிந்த திருவே!
திக்கினில் எட்டோடு மேல் கீழ்கள் பதினான்கும்
தேசுடன் உலவும் உருவே
பொக்கெனப் போகு முயிர் போமுன்னர் எதிர்நின்று
போக்குவாய் கால பயமே!
சிக்கெனப் பற்றி னேன் திருவடித் தாமரை
சிறியனைக் காத்து அருளே!

தீயாகி மண்ணாகி வளியாகி ஒளியாகித்
திக் கெல்லாம் சூழ்ந்த வடிவே
தாயாகி நின்றிந்தத் தாரணி புரக்கின்ற
தாயகி வேற்காட்டி லே
நீயாகி நிலை நின்று நினைப்பவர்க் கெல்லோர்க்கும்
நிறையன்பு சொரியும் தாயே !
சேயாகி மக்கள் குலம் சேவிக்க நின்றருளும்
வேற்காட்டுக் கரு மாரியே.

நேர்கோட்டு வாழ்வினிடைப் போர்க் கோட்டும்துன்பமெலாம்
சீர் காட்டி யருள் புரியவும்
ஊர் கூட்டும் புகழுடைய உல கீட்டும் செல்வமுற
உன்பதம் பணிந்து வாழ்வோம்
கார் கூட்டுங் கருமை நிறப் பேர்கூட்டியருள் பொழியும்
வேர் காட்டுக் கருணை மழையே!
பார் கூட்டிக் கருணைவிழி நேர் காட்டி அழைத்தருளும்
வேற்காட்டுக் கரு மாரியே!



அருள்க எம் தாயே நீ அருள்க!

மாதவன் கண்ணனுன் அண்ணன் — தமிழ்
மக்களின் தெய்வம் முருகனுன் பிள்ளை
காதலனே இந்த வையம் அனைத்தும்
காக்கும் பொருப்பினை ஏற்ற நல் ஈசன்
நீ தவம் செய்வதோ எங்கள் -- மன
நிம்மதிக்கன்றி எதற் கம்மா
ஆதவன் போலுல கெங்கும் -- உன்
அருள் மழை பரவிப் பெருகவை தாயே!

கண்கள் நெருப்பினைக் கக்கிடும் -- உள்ளம்
கருணை அமுதை அன்பர்கட் களித்திடும்
வன்செயல்! கொடுமைகள்! அன்றே! -- சிங்க
வடிவில் அமைந்த வாகனம் உனக்கு
விண்ணுல காள்வதை விட்டனை -- எம்மை
விரும்பிஎம் விருப்பம் போல் உருவினைப் பெற்றனை
மண்ணிலே தமிழக எல்லைக்கு -- நீயுமுன்
மகனுமே காவலாய் நின்றீர்கள் அம்மா!

சிங்கங்கள் தோன்றிய திருவிடம் -- கல்விச்
செல்வச் சுரங்க நிலைக்களம் வங்கம்
அங்குதான் பிறந்தனள் சிறிதுமே -- கல்வி
அறியாத கம்சன்! அவ்வழி சென்றுன்
தங்கு தடையில்லா அறிவினை -- கல்வித்
தரத்தால் உயர்த்திய நரேந்திரன் என்ற
பொங்கும் புனல் நிகர் சொல்லினன் -- அவன்
புகழும் அறிவும் நீ தந்தவை அன்றே!

நாயெனத் திரியும் மிலேச்சர்கள் என்றும்
நம்மிடை ஏதென உறுமியிம் மண்ணைத்
தாயெனக் கருதிய சிவாஜி தான் -- அன்று
தமிழகம் வந்து வுன் தாளடி வணங்கினன்
சேயெனச் சிவாஜியை ஏற்றநீ -- வீரத்
தெய்வமாய் மாற்றினை மராட்டிய மறவனை
நீயென தென்பவர் நீங்கலாய் -- உன்னை
நினைப்பவர் அனைவரும் வாழ்வர் நல் வாழ்வே!

கொடுமையே மானிட உருவமாம் -- அவன்
கொள்கையோ பாதகக் கலைகளாம் மக்கள்
படுவதோ இம்சையில் இம்சை -- அஃது
பட்டதோ நின் கடைக் கண்களில் ஆ கா
கொடுமைகள் சுக்கு நூருயின -- ஜார்
கோட்டையும் குப்பையும் ஓர் நிறைபெற்றன
நடுநிலை! தோழமை! தனைத்தன - ரஷ்ய
நாடெங்கும் -- பொது வுடைமைகள் பரவின

எண்ணற்ற உருவம் நீ கொண்டாய் -- தெய்வம்
எல்லாமே நீயாகி எங்கும் நிறைந்தாய்
பெண்ணென்று சொல்வார்கள் உன்னை -- பிறர்
பேயென்னும் இகழ்வார்கள் அன்னார் தம் உள்ளம்
கண்ணில்லான் கண்டதொரு பார்வை - அவர்
களிப்பதில் காய்வதில் ஒட்டாமல் மக்கள்
அன்னையாய்! காளிகா அம்பாளாய்! -- வையம்
அனைத்தையும் காக்கும் பொறுப் பேற்ற தாய் நீயே!

பாரதியின் ஆதிபராசக்தி -- பாஞ்சைப்
பதிவேந்தன் சக்கம்மா! "சிலம்பு தரும் தேவி"
சாரண நல் அமைதியுறும் குமரி - சினம்
பொங்க வேல் தூக்கி வரும் காளி! கருமாரி!
காரண நற் காரியங்கள் வேண்டி -- கௌரி
காமாட்சி! கஸ்தூரி! காந்திமதி! என்றும்
ஊரறிய மதுரை மீனாட்சி! -- சொக்கன்
உடலோடும் உயிரோடும் கலந்து நின்ற தாய் நீ!

ஆன்மீக வழிபாட்டு வேந்தன் - தெய்வ
அருளைத்தம் அன்பர்க்கு வழங்கும் நல்வள்ளல்!
வான் முட்ட புகழ் வீசிப் படரும் - இந்து
வரலாற்றில் நிறை குடமாய் வாழ்ந் துலகமெங்கும்
தேன் சொட்ட அர்ச்சனையைச் செய்து -- மக்கள்
தெய்வ நிலை அடைவதற்கு வழி திறந்து விட்ட
சான்றோ ராம் 'சாம் ப(நல்) மூர்த்தி' -- சிவாச்
சாரியார் புகழ் பரவ தாயே நீ அருள்க!

—சு. மூத்து, எம்.ஏ., பி எட்.



அருள்புரி மாகாளி !

(கவிஞர் வண்ணை ஆ. ஜானகிராமன்)

அம்பிகை பார்வதி அகிலாண் டீஸ்வரி ஆருயிர்க் கன்னியளே
தும்பிக்கை யானொடு சுந்தர வேலனைச் சோபையாய்ப் பெற்றவளே !
எம்மையும் காத்திட இவ்வுல கேத்திட ஏர்மதி கொண்டவளே!
அரனொடு வந்தென தல்லலை நீக்கியே அருள்புரி மாகாளி!

பெற்றவள் நின்னடி பிள்ளைகள் போற்றிடப் பெருமிதங்கொண்டவளே
நற்கலை யோடுயர் ஞானமும் தந்தென் நாவினில் அமர்ந்தவளே!
சொற்சுவை நனி மிகு சுருதியின் உட்பொருள் சூட்சமம் உரைத்திடவே
அரனொடு வந்தென தல்லலை நீக்கியே அருள்புரி மாகாளி!

கருவுரு வானவள் கலைவடி வாகியே காமுற வைத்தவளே !
அருள்விழிப் பார்வையில் அனைத்துயிர் இன்புற ஆடிடும் காமினியே
இரு நிலம் ஏத்திட எளியவள் போற்றிட என்னகம் உறைபவளே
அரனொடு வந்தென தல்லலை நீக்கியே அருள்புரி மாகாளி!

சூலமும் செங்கரம் சுழன்றிட மகிடாச் சூரனைச் சாய்த்தவளே!
ஞாலமும் உய்ந்திட ஞானியர் செய்தவம் நலமுற வைத்தவளே!
கோலமும் குழைந்திடக் கோபமும் தணிந்திடக் குளிர்முகங் கொண்டவளே
அரனொடு வந்தென தல்லலை நீக்கியே அருள்புரி மாகாளி!

துஞ்சிடா மனமொடு சுகம்பல நல்கியே தூய்மனம் அளிப்பவளே!
நெஞ்சினில் ஈரமும் நேசமும் பாசமும் நித்தமும் கொண்டவளே!
வஞ்சனைப் பேய்களை வதைத்தெம் வாழ்வினில் வளமொடு நலமருள
அரனொடு வந்தென தல்லலை நீக்கியே அருள்புரி மாகாளி!

வெற்றியே நல்கிடும் வித்தகி என் தரு வேணியன் காதலியே!
பற்றினேன் நின்னடி பாவியின் வாழ்வினைப் பாவமும் நீங்கிடவே!
செற்றலர் சாய்ந்திடச் செந்நெறி காட்டியென் சிந்தையில் நின்றிடவே
அரனொடு வந்தென தல்லலை நீக்கியே அருள்புரி மாகாளி!

ஈசனும் ஆடிட இடபுற மாடியே ஈஸ்வரி நீ வருவாய்!
பூசனை யான்செய புகழொடு புண்ணிய போதனை நீ தருவாய்!
மாசிலா மனமொடு மங்கள வாழ்வினை மகிழ்வுடன் நீ அருள
அரனொடு வந்தென தல்லலை நீக்கியே அருள்புரி மாகாளி!

பயங்கரி ஆயினும் பகைவரைச்சாய்த்தெமைப் பரிவுடன்காப்பவளே
துயர் வினை ஓட்டியே சுடர்முகங் காட்டியே ஜோதிவடி வானவளே
நயந்துனை வேண்டி னேன் நாநிலம் உய்ந்திடநலமருள் புரிந்திடவே
அரனொடு வந்தென தல்லலை நீக்கியே அருள்புரி மாகாளி!

கண் பாரும் காளிகாம்பாள்!

(ந. ரங்கராஜன்)

அன்பின் நல்வடிவ மாகி
ஆருயிர்க் (கு) அன்னையாகி
இன்னருள் புரியும் தூய
இகபர சக்தி நீயே
பண்ணுடன் பாட்டி சைத்துப்
பாசமாய் நானும் பாட
என்னில்வாழ் காளி காம்பாள்
இணையடிப் போற்றுகின்றேன்

ஆதிசிவ சக்தி யாகி
அகிலத்தை வாழ வைக்கும்
கோதறு குணமும் கொண்ட
கொடியிடைத்தேவி உன்னைத்
தீதிலா மனத்தால் போற்றித்
தித்திக்க ஓதும் மக்கள்
பாதகம் தீர்க்கும் தூய
பரிவுடைக் காளி அம்மா

இந்திர போகம் வேண்டேன்
ஈடிலாச் செல்வம் வேண்டேன்
சிந்தையுள் உன்றன் நாமம்
சிறப்புடன் விளங்க வேண்டும்
நிந்தனை செய்ப வர்க்கும்
நிழலாக நிற்பாய் நீயே
வந்தித்து வாழ்ப வர்க்கு
வரம்தரும் காளி காம் பாள் !

ஈசனிட பாக மானாய்
ஏழிசை நாத மானாய்
நேசமாய்ப் போற்றும் அன்பர்
நெஞ்சினில் நிறைந் திருப்பாய்
கேசரி மீத மர்ந்த
தேவியே மாரி அம்மா
பாசத்தால் கட்டுப் பட்டுப்
பக்தரைக் காக்க வந்தாய்

உலகெலாம் வாழ வேண்டும்
உன்னருள் கிட்ட வேண்டும்
கலையெலாம் கற்று நல்ல
காரியம் ஆற்ற வேண்டும்
சிலைவடி வாகி நிற்கும்
சீர்மிகு காளி காம்பா
நிலையிலா என்றன் வாழ்வில்
நிம்மதி வேண்டும் அம்மா

ஊருக்கோர் உருவ மாகி
உலவிடும் சக்தி நீயே
பேர்ப்பலக் கொண்ட தாயே
பெரும்பிழை பொறுப்பாய் நீயே
சீர்மிகு ஒற்றி யூரில்
சிறப்புடன் அமர்ந்த தேவி
பார்ப்புகழ் பத்ர காளி
பதமலர் பணிந்தேன் போற்றி

எண்ணிலாச் சக்தி கொண்ட
எழில்மிகு மாரி அம்மா
கண்ணுதற் கடவுள் காதல்
கண்மணிப் பெற்றாய் நீயே
மண்ணில்வாழ் மக்கட் கெல்லாம்
மகிழ்வருள் காளி அம்மா
தண்ணொளி வீசும் கண்ணால்
தனயனைப் பாரும் அம்மா

ஏரகச் செல்வன் பெற்ற
எம்குல மாரி அம்மா
கூர்வடி வேலைத் தந்தாய்க்
குணக்குன்றம் குமர னுக்கே
கார்முகில் வண்ணன் தங்கை
கனகவல் லித்தாய் உன்றன்
சீரடிப் போற்று கின்றேன்
சிறப்புடன் வாழ்வ தற்கே

கன்யாகுமரி பகவதி அம்மன்

(எஸ். தர்மலிங்கம்)

பெறுதல் என்பதே பெண்மையில் தாய்மையாம்
பேணிக் காத்தலே தாய்மையின் மேன்மையாம்
பெறுதல் இன்றியே பேணிக் காப்பவள்
பெரிய தாயவள்! குமரிப் பெயரவள்

முத்தமிழும் நீராகி முக்கடலாய் சங்கமித்து
நித்தநித்தம் நின்புகழை நெஞ்சாரப் பாடுகின்ற
வித்தையதன் தத்துவத்தை எண்ணிநான் வியக்கின்றேன்
இத்தரையில் இருபொருளாய் இருக்கின்ருய் என்தாயே!
(இச்சா சக்தி, கிரியாசக்தி)

சண்மதத்தை நிலைநிறுத்தித் தளர்வுற்ற இந்துமதம்
உன்னதத்தை அடைந்திடவே உயர்வழியைக் காட்டிட்ட
சங்கரனும் நின்பதமே தவமிருந்தான் என்றுரைக்க
என்னபேறு பெற்றிட்டேன்! என்தாயே! பகவதியே!

இந்து மதத்தின் எழுச்சி யினுலே
இந்திய நாட்டின் இடரைப் போக்கிட
மூந்தி விவேகா னந்தன் யாத்திரை
முனையாம் குமரியில் முழுமை பெற்றது
(ஆதிசங்கரனும்)

திருப்பாதக் குன்றில்நின் திரும்பாதம் கண்டு
தியானம் செய்துமே தெளிவுவரப் பெற்றே
அருளாள னுகிப் பல அயல்நாடு சென்றும்
ஆன்மீகம் பரப்பினன் அன்றுவிவே கானந்தன்

அமெரிக்க நாட்டில் அதிவீரப் பேச்சே
அகில உலகிற்கும் ஆத்மீக வீச்சே
விமரிசை யுடனே விளங்கிட உன்னருள்
விளைத்த பயனன்றி வெறெது வுமில்லை

தட்சிணத்தின் மூலையிலே தாயகத்தின் எல்லைதனைத்
தவமிருந்து காப்பவளே! தாயான பகவதியே!
ஓம்சக்தி உமையவளே! ஓங்கார உட்பொருளே
உன்னருளால் மக்களெல்லாம் உய்யவழி காட்டிடுவாய்

அகிலாண்ட அன்னை போற்றி!

[வி. இராசாபாதர்]

திருவானைக் காவென்னும் பதியில் நின்றே
சிறப்பாக ஆணையினை நிகழ்த்துகின்ற
கருணையுள்ள அன்னையேஉன் ஆற்றல் தன்னைக்
காட்டுகின்ருய் அருளாட்சி அறிந்தோர்
எல்லாம்
ஒருமையுடன் நெஞ்சுருகப் போற்றிப் பாடி
உன்னடியார் ஆனவர்கள் மண்ணகத்தில்
பெருமையுடன் வதிகின்ருர் தூய்மை வாழ
பீடுடனே நினதுபுகழ் பேசுகின்ருர் !
அகிலத்தை ஆட்சிசெய்யும் காரணத்தால்
அகிலாண்ட நாயகியாய்ப் பெயரைப்
பெற்ருய்
மகிழ்வாக அனைத்தையுமே தந்தாய் அந்த
வளத்தினையே அனைத்துயிரும் சமமாய்ப்
பெற்றுப்
பகிர்ந்துண்ண நல்லறிவைத் கொடுத்தாய்,
தீயர்
பறித்துமிகக் குவிப்பதற்கே நினைத்தார்
தம்மை
உகிர்தன்னுல் கிள்ளுதல்போல் களைந்து நீதான்
ஒன்றுபட்டு வாழவழி அருள்க தாயே !
கண்ணனுடைத் தங்கையேநீ கனிவு
மிக்கோய்க்
கடமையினைச் செய்பவர்கள் துன்பச் சேற்றில்
திண்டாடித் தவிக்கின்ருர்; சாக சத்தல்
திரிபுவாதம் புரிபவர்கள் உயர்தல் நன்ருே?
கண்டிப்பாய் இக்கொடுமை மாற்ற மெய்த
கருணைசெய்வாய் ஆனைக்கா அன்னுய் இந்த
எண்டிசையில் இருப்பவர்கள் சமமாய் வாழும்
இனிய நெறி தனில் நிலைக்க அருள் பாலிப்பாய்
அரும்பாகி, மலராகி, காயே யாகி
அதுபின்னர் கனியாகி நலம்பயக்க
அருளுகின்ற உன்திறத்தை அறிந்தவர்கள்
அகத்தினையே பண்படுத்திக் கனிவுகொண்டு
விருப்புடனே உன்தொண்டில் ஒன்றி நாளும்
மேன்மையினை அளிக்கின்ற தகுதி யாலே
இருவினைக்கும் ஆட்பட்டு, வாழ்ந்திடாமல்
இடர்ப்படுவார்க் குதவிடும்உன் அடியார்
தாயே !

இரவினிலே பகலினிலே உறக்க மின்றி
இருக்கின்ற காரணத்தை உரைப்பா யா நீ?
இரவென்றும் பகலென்றும் பார்த்தி டாமல்
இனிதுழைக்கும் தொழிலாளர் நலனைக்
காக்க
இரவினிலே கண்வளரா திருக்கின் றுயா?
இடர்ப்படுத்தி பொருளகுவிக் தும் கொடி
யோர் பெற்ற
கரவுதனை அழிப்பதற்கே சிங்க நோக்கைக்
காட்டிநிற் கின்றுயே எழிலே போற்றி !

கற்கின்றுர் கேட்கின்றுர் கற்ற தைப்போல்
கவினுறவே ஒளிர்கின்றுர் கடமை தன்னை
அற்புதமாய்ச் செய்கின்றுர் இவற்றிற் கெல்லாம்
அன்னை உன்றன் அருளென்றே எண்ணு கின்
றேன்
குற்றமிகச் செய்கின்றுர் கொள்ளை யிட்டுக்
கோடிப்பணம் பதுக்கிடுவர் உனை நினைக்கும்
பற்றில்லார் வீழ உன்றன் அம்புக் கண்ணுல்
பார்த்திடுக ! அகிலாண்ட அன்னுய் வாழி !

சமயங்கள் அனைத்திற்கும் சத்தி யாகச்
சார்ந்தினிதே அருள்சுரக்கும் தேவி நீதான்
சமயாதி பேதங்கள் விரித்துப் பேசும்
தன்னலத்தார் திருந்திடவே உணர்த்தி
வைப்பாய்
அமைதியுள்ள சமுதாயம் அமைதற் காக
ஆட்படுத்தும் தனியுடைமை நீக்கி, இன்பச்
மதர்மப் பொதுவுடைமை தழைத்து நிற்கத்

தயாபரியே அருள்மழையைப் பொழிவாய்ப்
போற்றி !

நீர்காற்று நிலம்தீயை வானந் தன்னை
நீ படைத்தாய் ஐம்பூதச் செயலால் ஞாலம்
சீர்பெற்றே இலங்கிடவே இயக்கு கின்றுய்ச்
சிறப்புடனே உயிர் அணைத்தும் வாழ வைப்
பாய்
ஆர்த்தெழுந்தே பிரளயத்தால் உலக ழித்தே
ஐம்பூதம் தனில்வைப்பாய்ப் பின்னர் உன்றன்
பேர்சிறக்க உலகுயிரைத் தோற்றி வித்துப்
பெற்றியினைக் காட்டிடுவாய்த் தேவிபோற்றி !

சங்கரன் கோவிலில்
ஸ்ரீ கோமதி அம்மன்

(மீ. விசுவநாதன்)

சங்கரன் கோவில் தன்னைத்
  தன்னுடை வீடு என்று
குங்குமம் இட்ட வேளை
  கோமதி அன்னை யானுள்!
தங்குமே பிள்ளைச் செல்வம்
  தப்பாதே அவளைக் கண்டால்
சங்கடம் தீரும் நெஞ்சே
  சந்தேகம் இல்லை ஈதில்!
நெஞ்சிலே பக்தி வைத்து
  நெற்றியில் பொட்டு வைத்தால்
வஞ்சனை செய்ய மாட்டாள்
  வாசலில் கதவு தட்டிக்
கஞ்சமே இல்லா வண்ணம்
  கருணைதான் காட்டி நிற்பாள்!
சஞ்சலம் வேண்டாம் நெஞ்சே
  சகலமும் சக்தி நீழல்!
சிவனுடன் போட்டி யிட்டுச்
  சிலதினம் தனிமை யானுள்!
உலகத்தின் இயக்கம் எல்லாம்
  முக்கண்ணன் நிறுத்தி வைத்தான்
தவற்றினை உணர்ந்து கொண்டு
  தரணிக்கு நீதி காட்ட
தவநெறிக் கோலம் [பூண்டாள்!
  தாயவள் நாதன் சேர்ந்தாள்
"சிலையிலே தெய்வம் உண்டா?
  சிந்தித்தால் பதிலும் உண்டு!
சிரயிலா உடலின் உள்ளே
  நிறமிலா உயிரைப் போல
விலையிலா உலகைக் கண்டு
  விளையாடும் எவ்வு யிர்க்கும்
கலைவளர் இறைவன் என்றால்
  கற்பனை அல்ல நெஞ்சே!

என்னை ஆளும் அன்னை!

(சீனி வீரப்பன்)

அன்னை என்பவள் ஒருத்தி நம் பக்கம்
அன்றாட வாழ்க்கையின் அனைத்துமே அவள் பக்கம்!
தன்னைப் போற்றினால் தருவாள் சொர்க்கம்
அன்னையின் நீழலே அருள்நெறி மார்க்கம்

துயர்நீக்கி இடர்ப்போக்கும் சுடர் விளக்குத்
துன்பம் என்றாலே ஏதுவேறு துணை நமக்கு?
பயிர் வளரச் செய்யும் மாமழையைப் போன்று
பாரினிலே அவள் செயல்கள் எத்தனையோ சான்று

வளர்ந்து வரும் சிந்தனையின் ஆக்கம் நீயே!
வழியெல்லாம் துணையாக வந்திடும் தாயே!
தளர்ந்திங்கு மனம் சோர்ந்து நிற்கும் வேளை
மலர்ந்திங்கு மணம் வீசும் வாழ்க்கைச் சோலை!

முத்துகள் பலவற்றை முனைந்தே எடுத்தாலும்
வித்துகள் அனைத்தும் உன்னுடைய சொத்தாகும்
எண்ணம் விரிந்திட்டால் ஒன்று பத்தாகும்
இயங்கும் வாழ்க்கை வண்ண மணிக் கொத்தாகும்!

பின்னே வருகின்ற பெருமைதனை எல்லாம்
எண்ணேன்! எதுவரினும் உன்னதென்று சொன்னேன்!
பொன்னே! மணியே! பூவுலகின் கண்ணே!
என்னே உன்பெருமை எடுத்தியம்ப வார்த்தை யுண்டோ?



பவவினை போக்கும் பவானி

(அ. தமிழ்மாறன்)

தேடரிய ஆடியில் தெவிட்டாத தீந்தமிழில்
தோடாடல் போலாடிச் சங்கரனார் பங்குறையும்
பாலாகச் சுவையருளிப் பானையத்தின் ஆத்தாளாய்க்
கோலவெழில் உருகாட்டிக் கொலுவிருக்கும் அணிநலத்தாள்

துடிப்போடே இருக்கையிலே தூயவளைத் துறந்தவர் யார்?
மிடியோடே உழல்கையிலே மாதாவை மறந்தவர் யார்?
படிமிசையில் இருப்பவர்கள் பத்தியுடன் அவள் சிறப்பைப்
பிடிப்புடனே சொல்பவர்கள் பெற்றியுடன் மிளிர்ந்திடுவர்

கொள்ளையெனும் நோய்போக்கி கொள்ளையின்பம் அள்ளியள்ளி
வெள்ளமெனப் பாய்ந்தோட மிகவீரிப்பாள் பவானித்தாய்
அண்டங்கள் புவனங்கள் ஐந்தான பூதத்தால்
எண்டிசையும் இயங்கவைக்கும் எழில்பெரிய பானையத்தாள்

சீதமே தலைக்கேறிச் சிவனென்றே யானுரே
போதமே சத்தியெனப் புகழையெலாம் பரவிடுவார்
கசிந்துருகும் கருணையினால் பசித்தாகம் போக்கிடுவாள்
ஓசிந்துவரும் நடையழகால் உலகையெலாம் காத்திடுவாள்

இனியநீர் தண்ணளிபோல் இலங்கியுயர் அருள்சுரக்கும்
பனிமலர்க்கண் பவானியேதான் பார்இயக்கும் குணவதியாள்
வேப்பிலையாற் சீலைகட்டி விழைந்துவந்து பணிவார்க்கே
காப்பருளி வருகின்ற கண்ணனுக்கே தங்கையவள்

மாசு மலாம் நிலைத்திடவே நைஇஞ்சிடுவர் சிலரேதாம்
துன்பமெலாம் தொலைந்திடவே தொழுதிடுவர் பலரேதாம்
இன்பத்தைத் துன்பத்தை இவள்தந்த புரிசென்றே
உன்னியே பார்ப்பவர்கள் உலகத்தாய் அருள்பெற்றார்

இருத்தலென இல்லையென இவ்வுலகில் மறுப்பவர்க்குக்
கருப்பையில் இருட்டறையில் கவினுற்று மறைவாகி
உருவாகி உயிராகி உணர்வாகி ஒளியாகித்
திருவாகி தனியோங்கி உலகமெலாம் பரவி நிற்பாள்

அங்கெங்கும் எனுதபடி ஆனந்த வடிவாகிச்
சங்கமுத் தமிழேபோல் சான்றோர்கள் உள்ளம்போல்
பொங்கிவரும் இன்பமெலாம் பொலிந்திலங்கப் படைத்தருளி
இங்கிதமாய் உயிர்புரக்கும் இறைவியினைத் தொழுதிசைப்பேன்

மதுரை மீனாட்சி

(இலந்தை சு. இராமசாமி)

கொங்குதிகழ் பூமலர் தங்கிவளர் கூடலின்
கோமகள் தேவி உமையே
கோலா கலத்தமிழே நாலாபுறம்திகழக்
கொண்டாடும் கூடல் இறையே

திங்கள்முடி எம்பிரான் பங்கில்வளர் அம்பிகை
தேனுட்சி மீனாட்சியே
செந்தமிழ் பேசிடும் பைந்தமிழ்ச் செல்வியே
சித்திரச் சீமாட்டியே

சங்கமுயர் மதுரையில் பொங்குதமிழ் ஆய்ந்திடத்
தான்விருந் தேற்கு மணியே
சத்தியத் தடாதகை இத்தரை உலாவிய
சக்தியே தேவதேவி

தொங்குமெழில் உச்சியில் தங்குமுகில் கோபுரச்
சோதியே ஞான வடிவே
சொக்கன்மனம் சொக்கியே சுற்றிவரும் சொக்கியே
சுந்தரி போற்றி போற்றி !

தென்பாண்டி மண்டலம் அன்னைநின் குண்டலம்
சேரண்டம் முகமண்டலம்
சேல்விழிப் பார்வையில் கால்கொளும் செந்தமிழ்
தேவிநின் தாள்மந்திரம்

பண்பாட்ட கூடலின் மண்பூண்ட பேறுநின்
பாதம் பதிந்ததன்றோ
பாராளும் வேந்தெனத் தாராளமாகவே
பரமன் வதிந்ததன்றோ

திண்டாடும் நெஞ்சங்கள் கொண்டாட எததனை
திருவிளையாடல்களே
தேன்மழை சிந்திடும் வான்பரஞ் சோதியின்
தீந்தமிழ்ப் பாடல்களே

தொண்டாளும் உள்ளங்கள் சூழாது கள்ளங்கள்
ஜோதியே ஞான வடிவே

சொக்கன்மனம் சொக்கியே சுற்றிவரும் சொக்கியே
சுந்தரி போற்றி போற்றி !

ஓடுகிற இப்புவி கூடுகிற யாவையும்
ஓடிடச் செய்பவள் நீ
ஓங்குதிரை நீர்ப்புனல் வாங்கிமுகி லாகவே
ஊற்றிடப் பெய்பவள் நீ

பாடுகிற என் மொழி போடுகிற வார்த்தையில்
பாவமாய் நிற்பவள் நீ
பாவனை யாகவே பாருளோர் கண்முனே
பாசமாய்க் கற்பவள் நீ

தேடுகிற மெய்ப்பொருள் வீடுபெறச் செய்பொருள்
ஜீவனும் உருப்பொருள் நீ
சித்தாந்தம் யாவையும் கொத்தாக வேபதம்
சேர்க்கின்ற கருப்பொருள் நீ

சூடுபெறு தீயினை நீடுபெறு கையிலே
துறையிடுவான் தேவி நீ
சொக்கன்மனம் சொக்கியே சுற்றிவரும் சொக்கியே
சுந்தரி போற்றி போற்றி !

வந்துவிழும் செந்தமிழ் சந்தமியல் நாடகம்
வளர்கொங்கை மூன்றாக்கினாய்
வத்துபதி நாடகம் தந்தபதி ஆகையால்
மற்றதை நீ போக்கினாய்

சந்தமுயர் குருபரன் தந்தமிழ்கேட்கநீ
தத்தியே வந்த தத்தை
சன்னஇள முறுவலொடு சின்னதொரு பெண்ணாகத்
தந்தனைக் கொத்து முத்தை

சிந்தனையி லேபொருள் வந்தனையச் செய்தனை
செந்தமிழிலே பெய்தனைச்
சேல்விழிப் பெண்மையே கோல்நெறி வழுவாத
தெய்வமே மீனாட்சியே

சொந்தமென உன்னையே வந்தனைகள் செய்பவர்
தோல்வியே காணமாட்டார்
சொக்கன்மனம் சொக்கியே சுற்றிவரும் சொக்கியே
சுந்தரி போற்றி போற்றி.

பெண்மையும் ஆள்வதை மண்ணில் விதைத்தோர்
பேற்றினைக் கண்டவள் நீ
பித்தனும் உன்மனச் சித்திலே பித்தனாய்ப்
பீடுறக் கொண்டவள் நீ

உண்மையே, தண்ணளி வண்மையே, சிறுமியாய்
ஓர்வேள்வி பூத்தவள் நீ
உலகாளும் நாயகி நிலபாரம் தாங்கியே
ஓர்குடை காத்தவள் நீ

கண்விழிப் பார்வையில் எண்ணிலா உயிர்களின்
கவலைகள் பொடித்தவள் நீ
கண்முதல் தேவற்கும் பெண்முதல் கவுரவம்
கற்றுமே கொடுத்தவள் நீ

தொண்டர் மனக்குறை கண்டு பொறுத்திடா தோட்டிடும்
சோதியே ஞான வடிவே
சொக்கனும் சொக்கியே சுற்றிடும் சொக்கியே
சுந்தரி போற்றி போற்றி !

ஸ்ரீ மாகாளி பாமலர்

கவிஞர். மா. கண்ணன்

மங்கள தீபம் எரிந்திடும் ஒளியில்
மகிழ்ந்திடக் கண்டோம் உன்முகமே
தங்கிடும் துணையாய் உன்னருள் தொடரும்
தாயே காளி திரி சூலி
குங்குமக்காரி மாகாளி
கொடுப்பாய்ச் செல்வம் பலகோடி

பார்க்கும் திசையெல்லாம்—அம்மா
பரம்பொருள் நீ ஆனாய்
யார்க்கும் பேதமில்லை உன்னருளே
எவர்க்கும் குறைவதில்லை
குங்குமக்காரி மாகாளி
கொடுப்பாய்ச் செல்வம் பலகோடி

தஞ்சம் உந்தன் பாதம்—அது
தருமே இன்பம் நாளும்
நெஞ்சம் அதிலே மகிழும்—செல்வ
நிலைமை பெருகி வளரும்
குங்குமக்காரி மாகாளி
கொடுப்பாய்ச் செல்வம் பல கோடி

காலையும் மாலையும் புலரும்— நல்ல
காலமும் நேரமும் மலரும்
நாளையும் பொழுதையும் ஆளும்—நல்ல
நாயகி உன்புகழ் சொல்வோம்
குங்குமக்காரி மாகாளி
கொடுப்பாய்ச் செல்வம் பல கோடி

மலைமகளே எங்கள் திருமகளே
மாகவி போற்றும் கலைமகளே
அலையென வாழும் அன்பினிலே
ஆயகலைகள் வாழ்ந்திடவே
குங்குமக்காரி மாகாளி
கொடுப்பாய்ச் செல்வம் பலகோடி

இல்லாமை எங்கள் மனம் சொல்லும்
இருப்பெல்லாம் உன்றன் புகழ் பாடும்
கல்லாமை உன்றன் மெய் ஞானம்—அதைக்
கற்றிட அருள்வாய்த் தினம் தோறும்
குங்குமக்காரி மாகாளி
கொடுப்பாய்ச் செல்வம் பலகோடி

கங்கா கௌரி காமாட்சி
கருணைக் குணமே உன்னாட்சி
மங்கா மங்கல மரகதமே
மஞ்சள் முகமே கோமளமே
குங்குமக்காரி மாகாளி
கொடுப்பாய்ச் செல்வம் பலகோடி!

வெண்பாவில் ஆடி மிளிர்ந்திடுவாள்

நேரிசை வெண்பா

[கவிஞர். சூடாமணி]

அன்னையாய்ப் பல்லோர் அவனியெங்கும் உள்ளவர்க்கே
அன்னையாய் ஆற்றல் அளிக்கின்ற—இன்பத்தாய்
காளிகாம்பாள் நம்மையெலாம் காத்தே அருள்நல்கும்
தாளிணையைப் போற்றிடுவோம் சார்ந்து!

ஆன்ற புவிவாழ்வில் ஆன்ம அருட்பண்பு
தோன்ற செயற்பட்டுத் தூயவளை—ஈன்ற
பராசக்தி என்று பதம்பாடிப் போற்றி
வரம்பெற்று வாழ்வோம் மகிழ்ந்து !

இந்த உலகத்தில் இன்பப் பெருவாழ்வைப்
பந்தமுடன் காண, பராசக்தி—அந்தமுள்ள
சீரடியை எண்ணிநிதம் சிந்தித்தால் நன்மையெலாம்
நேரடியாய்த் தோன்றும் நிலைத்து !

உலகளந்தான் தங்கையென ஊரனைத்துங் காத்தே
உலகத்தாய் ஆனாள் உயர்வால்—தலைமணத்தும்
நல்கும் பராசக்தி நாயகியின் பேர்பாடிப்
பல்லாண் டிசைப்போம் பணிந்து !

சக்தியெனும் ஆற்றல் தனைப்பெற்ற பெண்டிர்கள்
மிக்க அமைதியினால் மேன்மையுற—தக்கபரா
சக்தியின் சார்பேயாம் தாரணியின் தன்னியக்கம்
சக்தியின் பேராற்றல் சாற்று !

தயைகாட்டும் அன்பதனால் தாயாகிச் சீரார்
வியப்பூட்டும் செய்கையால் மேலோர் — மயற்வறுக்கும்
சான்றோர் மனத்துறையும் தண்ணளியாள் நம் வாழ்வின்
தோன்றாத் துணையாவாள் சூழ்ந்து !

தேடும் இடங்களிலே தேவியைக் காணாமல்
ஓடும் மனிதரெலாம் உள்ளொளியால் — நாடிநின்று
நெஞ்சுருகப் போற்றி நினைத்திடுங்கால் ஓடிவந்து
கொஞ்சிடுவாள் தம்முன் குழைந்து !

துன்புறுங்கால் எண்ணித் துதித்திடுவார் அம்பிகையை
இன்புறுங்கால் எண்ணு திருந்திடுவார்—மன்பதையில்
என்றும் பராசக்தி என்று வணங்குவார்க்கே
இன்பம் படைப்பாள் இனிது!

நித்தியா னந்தமாய் நின்று நலம்விளைக்கும்
சத்தியச் சன்மார்க்கம் சார்ந்தளிக்கும்—உத்தமியை
அன்பால் உணர்ந்தே அனுதினமும் பாடுவார்க்குப்
பொன்னுருப் புகழளிப்பாள் போந்து !

பயமின்றி வீற்றிருப்பாள் பாலைநிலக் காட்டில்
வியப்பூட்டக் காட்டிடுவாள் வீரம்—செயங்கொண்டான்
யாத்த பரணியிலே ஆடிநிற்பாள் அன்னையேதான்
மாத்தமிழாய் வாழ்வாள் மகிழ்ந்து !

பெண்ணிடத்தில் சக்தி பிறங்குதற்கோ காளிபெற்ற
பெண்மைநலம் தானென்றே பேசிடுவர்—கண்கண்ட
தெய்வமெனத் தாயின் திருவடியைச் சார்பவரே
மெய்யுணர்வைக் காண்பார் மிளிர்ந்து!

மண்ணில் ஒளிபாய்ச்சி வாழ்வளிக்கும் சூரியனைக்
கண்ணின் ஒளியால் கடாட்சிப்பாள்—வண்ணமுகக்
காமாட்சி பெற்ற கடைக்கண் திருவருளால்
பூமாட்சி காணும் பொலிந்து.

மாறி வருந்துயரால் மாண்பழிந்து போகாமல்
தேறி பராசக்தி சீர்த்தியினைக்—கூறியிவண்
சீலம் புரந்து செகத்தில் நலங்கண்டால்
காலமெலாம் வாழ்வார் களித்து!

வெம்மையுள்ள பாலைமண்ணில் வீற்றிருந்தே துன்பியலை
அம்பிகைதான் ஏற்றும் அகிலத்தைச்—செம்மையுறச்
சோலையெனச் செய்து சுகமளிப்பாள் மக்களுக்கு
வாலறிவுப் பண்பளிப்பாள் வாழ்த்து !

வெண்பாவில் ஆடி மிளிர்ந்திலங்க அம்பாளைப்
பண்பாடி நாள்தோறும் பக்திசெய்தால்—வண்டாடும்
முண்டகக் கண்ணியவள் முன்னோடி வேண்டிநின்றால்
தண்டமிழாய் வந்தருள்வாள் தாய் !

அன்னையவள் மலரடியை
அனுதினமும் பற்றிடுங்கள்
அன்ருடம் இன்பமெலாம்
அளித்திடுவாள் பெற்றிடுங்கள்

பண்பட்ட மனவீட்டில்
பராசக்தி குடியிருப்பாள்
உண்மையுடன் பாடுபடும்
உயர்கரத்தில் நடமிடுவாள்

அகங்காரம் இல்லாமல்
அடக்கமுடன் உழைப்பவர்தம்
தகைசான்ற திருப்பணியைத்
தாயவளே முடித்துவைப்பாள்

பிறப்பாலே சமமாகும்
பேறதனைப் பெற்ருலும்
அறச்செயலால் சிறப்புற்ற
அன்பருளம் அவள்விழைவாள்

உரமிட்ட நிலத்தின்கண்
உயர்ந்தோங்கும் பயிர்போலத்
தரமுடையார் நன்மனத்தில்
தாயவளே சுடர்த்துநிற்பாள்

தொண்டுசெய்தே வருபவர்தம்
துரோகத்தைத் தகர்ப்பவர்தம்
கண்டனத்திற் கஞ்சாமல்
கயமைகளை எதிர்ப்பவர்தம

பண்பட்ட நெறியதனல்
பழிக்கஞ்சி நடப்பதனல்
எண்ணிநலஞ் செய்வதனல்
எளியவர்க்கே அருள்வதனல்

நிலையினில் திரியாமல்
நெஞ்சுரத்தில் நிலைப்பவர்க்கே
உலகத்தாய் உமையவளோ
ஓடிவந்தே அருள்சொரிவாள்

என்றென்றும் பொதுமைநலம்
இனிதுசெய்ய வைக்கின்ற
அன்னையவாள் காமாட்சி
அருளாட்சி நாம்பாடி
நன்மை செய்து வாழ்வோம் நயந்து